RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1632

OPEN ACCESS

# வெள்ளக்கல்பட்டி - கோயில்களும் வழிபாட்டு முறைகளும்

ரா. ஜெயப்பிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Temples and its Cults in Vellakalpatti Region

R. Jeyapriya [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: jpriyabharath5@gmail.com

Received: 15-06-2022
Revised: 18-09-2022
Accepted: 28-10-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

Folk literature also called oral literature is about the culture of lay people and about the pride of Tamil Nadu. Earlier people worshipped nature as goddess. After civilization they began to live separately as families and worshipped the village deities Mariyamman and Kaliyamman to protect themselves. Then they began worshipping goddess with the hope that goddess will shower rain and so agriculture and other industries would prosper and people can live without disease. In order to thank deities, they celebrated festivals once in a year. They fulfill their wishes during the festivals. Psychologically the mind is happy during the festive seasons. The people of different races come together and celebrate the festival happily. Folk arts such as therukoothu, karakaatam, folk songs and so on are performed during the festivals. Thus, the life of the folk artists shines brightly because of festivals. Festivals and liturgies enrich our culture and its ethos emotionally.

**Keywords:** Folk literature, Folk Arts, Vellakalpatti Region, Festivals, Deities.

## முன்னுரை

சேலம் மாவட்டத்தின் ஓமலூர் வட்டத்தில் உள்ள வெள்ளக்கல்பட்டி கிராம ஊராட்சி 1950 க்கு முன்பு வெள்ளக்கரடு என்று அழைக்கப்பட்டது. மலைகள் காடுகள் சூழ்ந்த பகுதியாக இவ்வூர் இருந்துள்ளது. இங்குள்ள மலைப்பகுதியில் டால்மியா என்ற நிறுவனம் வெள்ளைக் கற்களை வெட்டி யெடுக்கும் சுரங்கத்தைப் பயன்படுத்தி வந்ததாக அறியப்பட்டது. சேலத்தில் இருந்து சுமார் 12கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

காலப்போக்கில் படிப்படியாக வளர்ச்சி பெற்று 1962 ஆம் ஆண்டு வெள்ளக்கரடானது வெள்ளக்கல்பட்டி கிராம ஊராட்சியாக உருவானது எனத் தெரிய வந்தது. இந்த ஊரின் பெயரானது, அங்கு கிடைக்கும் கனிமத்தின் பெயராலேயே அழைக்கப்பட்டது. வெள்ளக்கல்பட்டி கிராமத்தில் உள்ள கோயில்களைப் பற்றியும் அப்பகுதியில் அமைந்துள்ள மஞ்சுளாம்பள்ளம் மாரியம்மன் கோயிலில் நடத்தப்படும் திருவிழா மற்றும் வேண்டுதல்கள் பற்றியும் இவ்வாய்வுக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## கோயில் வழிபாடு

மக்களின் மனம் விழிப்புணர்ச்சி பெறத் தொடங்கிய நாள் முதல் இறைவனை வணங்கும் பழக்கம் தொடங்கி விட்டது. வாழ்க்கையில் எல்லா நலமும் வளமும் பெறவேண்டும் எனக் கருதி

கடவுளை வழிபடுகின்றனர் (Dhatchanamoorthi, 1973; Murugesan, 2003). தெய்வ வழிபாட்டிற்கு மன அமைதி அடிப்படையாகும். மன அமைதிக்கு ஏற்ற இடம் தெய்வம் குடிகொண்டுள்ள கோயில் என்பர். இத்தகைய கோயில்கள் வெள்ளக்கல்பட்டி கிராமத்தில் உள்ளன.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்ற ஔவையார் வாக்கிற்கு இணங்க கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குவது மிகுந்த நன்மையைத் தரும், என்பதை அறிந்து இவ்வூர் மக்கள் வழிபாட்டு முறைகளை மேற்கொண்டுள்ளனர். மஞ்சுளாம்பள்ளம் என்ற பகுதியில் உள்ள மாரியம்மன் கோயில் திருவிழா மிகவும் சிறப்புடன் நடத்தப்படுகிறது (Auvaiyar, 2014; Guru Subramaniyam, 1996).

## வெள்ளக்கல்பட்டியில் உள்ள கோயில்கள்

1. உடைந்த பாலம்
2. கெண்டியான் வட்டம் - காளியம்மன் கோயில்
3. சீனிவாச நகர் - புத்துமாரியம்மன் கோயில்
4. தாழம்பூ நகர்
5. பாமன்கரடு - செம்பு மாரியம்மன் கோயில்
6. வினாயகா நகர்
7. மஞ்சுளாம்பள்ளம் - மாரியம்மன் கோயில்
8. பாரதிநகர்
9. வசந்தம் நகர்
10. எம்.ஜி. ஆர். நகர்
11. காமராசர் நகர்
12. நெருஞ்சிப்பட்டி காட்டுவளவு
13. நெருஞ்சிப்பட்டி - மாரியம்மன் கோயில்

இங்கு அனைத்து மாரியம்மன் கோயில்களிலும் விநாயகருக்குச் சன்னதி எழுப்பப்பட்டுள்ளது. அம்மனுக்குப் பூசைகள் நடைபெறுவதற்கு முன் விநாயகருக்கு முதலில் பூசைகள் செய்யப்படுகிறது.

## திருவிழாவின் நோக்கம்

தை மாதத்தில் அறுவடை முடிந்தவுடன் காடுகளில் விளையும் பயிர்களின் பயன்களுக்கு திருவிழா கொண்டாடப்படுகிறது. மாரி அல்லது காரியம் இல்லை என்ற ஔவையின் கூற்று நினைவுகூறும் வகையில் வளமாக நன்றி செலுத்தும் விதமாகக் குளிர்காலம் முடிந்து கோடைகாலம் தொடங்குவதால் வெப்பத்தைத் தணிக்கும் விதமாகவும் ஊர்த் தேவதைகளான மாரியம்மன், காளியம்மனை வணங்கினால் மழைப்பொழிந்து ஊர் செழிப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

"விழா எனும் திறந்த வாசல் வழியேதான்

நம் நாட்டு மக்களை அறிந்துகொள்ள முடியும்"

என்ற தாகூரின் கருத்தை அ. தட்சிணாமூர்த்தி அவர்கள் தமிழக வரலாறும் பண்பாடும் என்ற நூலில் தெளிவுபடுத்தியுள்ளார் (Dhatchanamoorthi, 1973).

## கூட்டம் கூட்டிக் கலந்து பேசுதல்

தை மாதத்தில் இரண்டாம் செவ்வாய்க்கிழமை ஊர்க்கவுண்டர் அழைப்பின் பேரில் கோயில்களில் கூட்டம் கூட்டப்படும். ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒருவர் அந்த சமுதாயத்தின் சார்பாகக் கூட்டத்தில் கலந்து கொள்வர் (Annammal, 2022, Age 56, Personal Interview, Salam, India)

ஒவ்வொரு சமுதாயத்திலும் உள்ள பெரியவர்களை ஊர்க்கவுண்டர் என்று அழைக்கின்றனர். ஊர்க்கவுண்டர், தர்மகர்த்தா மற்றும் பூசாரி ஆகியோர் கலந்து கோயில் பண்டிகைக் கொண்டாடுதல் பற்றிப் பேசி முடிவு எடுக்கின்றனர். வரி எவ்வளவு போடுவது எனக் கலந்துப் பேசி முடிவு எடுக்கின்றனர்.

## பறையடித்துத் தெரிவித்தல்

கோயில் பண்டிகைத் தேதி முடிவு செய்த பின்னர் பறை அடிப்பவர் ஒவ்வொரு வீதியிலும் பண்டிகைத் தேதியைக் குறிப்பிட்டுச் சொல்லிப் பறையடிப்பார். வேண்டுதல் வைத்தவர்களைப் பூசாரி கோயிலுக்கு வந்து காப்புக் கட்டிக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார் எனப் பறையடிப்பவர் ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்துவார் (Ramalingam, 2022, Age 62, Personal Interview, Salam, India).

## காப்புக் கட்டிக் கொள்ளுதல்

கோயில் பூசாரி, பக்கபூசாரி, வேண்டுதல் வைத்தவர்கள் ஆகியோர் பண்டிகை காட்டும் நாளில் காலையில் வந்து காப்புக் கட்டிக் கொள்கின்றனர். காப்புக் கட்டியவுடன் ஊரில் உள்ளவர்கள் வெளியூர் சென்று விட்டால் அன்று இரவே ஊர் திரும்பிவிட வேண்டும். ஊரில் யாராவது இறந்து விட்டால் பிணத்தை உடனே எடுத்து அடக்கம் செய்துவிடுவர். மூன்றாம் நாளே இறப்புக் காரியம் செய்கின்றனர். ஊரின் வெளியே இறந்து விட்டால் பிணத்தை நேரடியாக சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று வழிபடுகின்றனர். திருமணத் தேதிகள் இந்த இரு வாரங்களில் முடிவு செய்யப்படுவதில்லை. திருமணங்கள் இத்தேதிகளில் நடைபெறுவதில்லை. மக்களிடம் வரி வசூலித்தே இப்பண்டிகையை நடத்துகின்றனர் (Nagarajan, 2022, Age 60, Personal Interview, Salam, India).

## மாரியம்மன் ஆட்டம் பயிற்சி

தினமும் இரவு எட்டு மணிக்கு மேல் பறை மற்றும் வாத்தியக்கருவிகளின் இசைக்கு ஏற்ப ஊரில் உள்ள இளைஞர்கள் மாரியம்மன் ஆட்டத்திற்குப் பயிற்சி எடுக்கின்றனர். வழிவழியாகப் பரம்பரை ஆட்டம் ஆடுபவர்கள் மூலம் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. காப்புக் கட்டிய நாள்முதல் திருவிழாவிற்கு இரண்டு நாட்கள் முன்னர் வரை பயிற்சி பெறுகின்றனர். இந்த மாரியம்மன் ஆட்டம் பயிற்சி பெற்றவர்கள் ஒவ்வொரு கரகங்களை எடுத்துக்கொண்டு வருபவர்களின் முன்னால் ஆடி வருகின்றனர் (Nallusami gavundar, 2022, Age 61, Personal Interview, Salam, India).

## கம்பம் நடுதல்

பண்டிகை சாட்டிய அன்று செவ்வாய்க்கிழமை தொடங்கி மறுவாரம் செவ்வாய் கம்பம் நடுதல் நிகழ்ச்சி நடைபெறும். பாலைமரக் குச்சியைத் திரிசூலம் வடிவில் அமைத்துக் கோயில் வாசலில் இடதுபுறம் நட்டு வைக்கின்றனர். வலதுபுறம் அம்மன் திருவுருவை வைத்துப் பூசைகள் செய்கின்றனர்.

ஏறத்தாழ திருமண விழாபோன்று இந்த நிகழ்ச்சி நடைபெறும். ஊரில் உள்ள மாமன் மைத்துனர்கள் இந்த விழாவிற்கு மொய் விருந்து எழுதுவர். இந்த மொய்ப்பணம் திருவிழாவிற்காகச் செலவு செய்யப்படும் (Sankaranarayanan, 2022, Age 55, Personal Interview, Salam, India).

## பெண்கள் நீருற்றி வழிபடுதல்

கம்பம் நடுதல் நிகழ்ச்சி தொடங்கி ஒரு வாரம் தினமும் அதிகாலையில் பெண்கள் குளித்து நீராடி குடத்தில் மஞ்சள் கலந்த நீரை எடுத்துக்கொண்டு வந்து அம்மன் திருவுருவின் முன் உள்ள பீடத்தின் மேல் ஊற்றி அம்மனை வழிபடுகின்றனர் (Susilla, 2022, Age 50, Personal Interview, Salam, India).

## கூழ் ஊற்றுதல்

திருவிழாவிற்கு ஒருநாள் முன்பு ஒவ்வொரு வீட்டிலும் கூழ் காய்ச்சிக் கொண்டு வந்து அம்மனுக்குப் படைக்கின்றனர். அந்த வருடம் விளைந்த தானியங்களான கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, நெல், குதிரைவாலி, பாசிப்பருப்பு ஆகியவை கலந்து கூழாகக் காய்ச்சி ஒரு தூக்கு வாளியில் எடுத்துக்கொண்டு வந்து கோயிலில் வைக்கப்பட்ட அண்டாவில் இந்தக் கூழ் ஊற்றப்படுகிறது. இந்தக் கூழினை ஊர் மக்கள் அனைவரும் விரும்பி வாங்கி சிரத்தையும் அருந்துகின்றனர். இந்தக் கூழ் உண்டால் அன்று இரவு சத்தாபரம் என்னும் தேர் நிகழ்ச்சிக்கு சக்தி கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. (தற்காலத்தில் கேழ்வரகு, அரிசி, மோர், தயிர் கொண்டு இந்தக் கூழ் தயாரிக்கப்படுகின்றது.)

## தேர் ஊர்வலம்

ஐம்பொன்னால் ஆகிய தெய்வ உருவைப் பூக்களால் அலங்காரம் செய்து ஊர்வலம் வருவது சத்தாபரம் என்கின்றனர். வண்ண விளக்குகளால் அலங்கரித்து டிராக்டரில் அம்மன் உருவை வைத்து வலம் வருகின்றனர். ஒவ்வொரு வீதியின் இருபுறங்களில் வீடுகளுக்கு முன் நிறுத்துகின்றனர். வீடுகளில் இருந்து பெண்கள் மஞ்சள் நீரை வேப்பிலைக் கலந்து தெய்வ உருவிற்கு முன்பாக ஊற்றித் தேங்காய்ப்பழம், கற்பூரம், ஊதுபத்தி, பூமாலை கலந்தத் தட்டைப் பூசாரியிடம் கொடுத்துத் தங்கள் குடும்பத்துடன் தெய்வத்தை வழிபடுகின்றனர். இந்தச் சத்தாபரம் இரவு 10 மணிக்குத் தொடங்கி அதிகாலை 4 மணி அளவில் கோயிலை வந்தடைகிறது (Ramalingam, 2022, Age 62, Personal Interview, Salam, India).

சத்தாபரத்தின் போது நையாண்டி என்னும் கரகாட்டம் நிகழ்ச்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். தர்மகர்த்தா, ஊர்க்கவுண்டர்கள், பூசாரி மற்றும் இளைஞர்கள் தேர் வலம் வரும்போது உடன் வருகின்றனர்.

## அம்மன் உருவச்சிலையை இருப்பிடத்தில் சேர்த்தல்

இரவு முழுவதும் ஊர்வலம் வந்த அம்மனை அதிகாலையில் இருப்பிடத்தில் கொண்டுவந்து சேர்க்கின்றனர். அப்பொழுது வெடிகள் முழங்க மேளதாளங்கள் முரசுகள் முழங்க வீடுவாசல் வரை வந்த அம்மனை கோயில் வாசலில் வைத்து வரவேற்றுப் பூசைகள் செய்து கோயிலில் உள்ள ஊஞ்சலில் அம்மன் உருவச்சிலையை இறக்கி வைக்கின்றனர்.

## நேர்த்திக்கடன் செலுத்துதல் (அ) வேண்டுதல்

‘நேர்த்திக்கடன்’ என்பது மக்கள் இறைவனிடம் தமக்கு இன்ன நல்லச் செயல் நடக்க வேண்டும் அல்லது வந்துள்ள நோய் தீர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு அச்செயல் நடந்தவுடன் கோயிலுக்குச் சென்று பண்டிகை நாட்களில் அதற்குரிய வழிபாட்டைச் செய்வதாகும். அவ்வாறு செய்வதைக் கடமையாகக் கருதுவதால் தான் நேர்த்திக்கடன் என்ற பெயர் வந்திருக்க வேண்டும்.

“ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது”

என்ற தமிழக நாட்டுப்பாடல் மாரி கடனை உடனே நிறைவேற்றிவிட வேண்டும் என்ற செய்தியை வலியுறுத்துகின்றது.

## சக்திகரகம்

செம்பு, பித்தளை, வெள்ளியிலான சட்டியில் இளநீர், மண் ஆகியவற்றைப் போட்டு பூக்களால் அலங்கரித்துப் பூசாரியின் தலையில் வைத்துக் கையில் வேப்பிலை வாயில் எலுமிச்சைப் பழம் வைத்து மேளதாளத்துடன் சாமி ஆடி வருவார். கோயிலை மூன்றுமுறை சுற்றி வந்தபின் பூசாரியின்

தலையில் உள்ள கரகத்தைப் பக்கபூசாரி அவருக்கு திருநீறு போட்டு இறக்கி வைக்க உதவுவார். அம்மன் சிலையில் சக்தியைக் கூட்டுவதற்குக் கரகம் எடுக்கப்படுகிறது. இதற்குப் பின்னால் பால்குடம், முளைப்பாரி, பூங்கரகம் போன்றவற்றை நேர்த்திக் கடன்களாக மக்கள் நிறைவேற்றுகின்றனர். இந்தக் கரகங்கள் வரும்போது மாரியம்மன் ஆட்டம் நடைபெறும். பொங்கல் வைப்பதற்கு முன் ஊர் மக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

## பொங்கல் வைத்தல்

பொங்கல் வைப்பவர்கள் கோழி, ஆடு பலியிட்டு மாவிளக்கு எடுத்துத் தேங்காய்ப்பழம் வைத்து வழிபடுகின்றனர். சிலர் சர்க்கரைப் பொங்கல் வைத்து மாவிளக்கு, தேங்காய்ப்பழம் படைத்து அம்மனை வழிபடுகின்றனர்.

## சேவல் ஆடு பலியிடுதல்

சேவல், ஆடு பலியிடும் போது தீர்த்தம், திருநீறு தெளிக்கப்படுகிறது. அப்போது சேவல் ஆட துளிர்த்தவுடன் பலியிடப்படுகிறது. துளிர்க்கவில்லை என்றால் இரண்டு மூன்று முறை தீர்த்தம் தெளிக்கப்படும். ஏதாவது குறைகள் இருந்தால் சேவல், ஆடு துளிர்க்காது என நம்பப்படுகிறது. அதன்பின்பு ரூ 50 அல்லது 100 சாமி மடியில் வைத்துக் குறை இருந்தால் மன்னித்து அருள வேண்டும் என அக்குடும்பத்தில் உள்ளவர்களும், உறவினர்களும் வேண்டுகின்றனர். அதன்பின்பு தீர்த்தம் தெளிப்பார்கள் பின்பு துளிர்த்தால் பலியிடுகின்றனர்.

## அக்னிக்கரகம்

குடும்பத்தில் அம்மைநோய் வந்தால் அது குணமடைய வேண்டி அக்னிக்கரகம் எடுப்பதாக வேண்டுதல் வைக்கின்றனர். கால்நடைகளுக்குக் கோமாரி நோய் தாக்கியிருந்தால் அதற்கும் வேண்டிக் கொண்டு அந்த நோய்கள் குணமான பின்பு நேர்த்திக்கடனை நிறைவு செய்கின்றனர்.

ஒரு மண்சட்டியில் மண், தவிடு, மூங்கில்குச்சிகள், காய்ந்த சாணி, கரித்துண்டுகள் போடப்பட்டு நெருப்பு மூட்டி தீக்கங்குகளாக்கித் தலையில் வேப்பிலை இலை வைத்துக்கொண்டு அதன் மேல் அக்னிக்கரகத்தை வைத்துத் தங்கள் வேண்டுதலை நிறைவு செய்கின்றனர்.

## அலகு குத்துதல்

தங்களின் வேண்டுதல்களை நிறைவேற்றிய அம்மனை ஓம்சக்தி, ஓம்சக்தி, பராசக்தி, பராசக்தி என்று கூறிக்கொண்டு நாக்கில், எலுமிச்சைப்பழம் வைத்து அலகு குத்திக் கொள்கின்றனர்.

## இரவு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்

மக்களின் பொருளாதார நிலைக்கேற்ப வெள்ளக்கல் பட்டியில் ஒவ்வொரு வருடமும் கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்படுகின்றன. தெருக்கூத்து, இசைநிகழ்ச்சி என கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

## மஞ்சள் நீராட்டு விழா

அம்மன் உருவச்சிலை வாகனத்தில் வலம் வரும்போது தாரை தப்பட்டை முழங்கும். ஒவ்வொரு வீதியாகச் செல்லும்போது மக்கள் மஞ்சள் நீர் ஊற்றி தேங்காய்ப்பழம் படைத்து அம்மனை

குடும்பத்துடன் வழிபடுகின்றனர். மாமன் மைத்துனர் உறவுமுறை உள்ளவர்கள் மீது மஞ்சள் நீர் ஊற்றி விளையாடுவார்கள். குழந்தைகள், பெரியவர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்வர்.

கோயில் வரி கொடுத்தவர்களின் வீடுகளுக்குத் தேங்காய்ப்பழம் கொடுக்கும் முறையைப் பூ பத்ரி அல்லது சுருள் கொடுத்தல் என்கின்றனர். இவ்வழக்கம் மஞ்சள் நீராட்டுக்குப் பின் நடைபெறும்.

## ஏலம் விடுதல்

கோயிலுக்குக் கட்டிய வாழை மரத்தில் இருக்கும் பழங்கள், தேங்காய்கள், தானியங்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றை ஏலம் விட்டு வந்த வரவைக் கோயில் செலவுக்குப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு மஞ்சுளம்பள்ளம் மாரியம்மன் கோயில் திருவிழா இனிதே நிறைவு பெறுகிறது.

## முடிவுரை

அச்ச உணர்வினால் தோன்றிய வழிபாடுகள் பின்னாளில் பழக்கமானது. அச்ச உணர்வு குறைந்து மகிழ்ச்சிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. கூடுதல், கொண்டாடுதல், பகிர்தல், வழிபடுதல் என்ற நோக்கில் கடவுள் நம்பிக்கைகளும், அறச்சிந்தனைகளும் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளாக மாறியது. இத்தகைய நெறிகள் திருவிழாக்கள் மூலமாக உணர்த்தப்பட்டது. வெள்ளக்கல்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள கோயில்களும் அப்பகுதியில் உள்ள மஞ்சுளாம்பள்ளம் மாரியம்மன் கோயில் திருவிழா மற்றும் வேண்டுதல்களைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. திருவிழா தொடக்கம் முதல் மஞ்சள் நீராட்டுதல் வரை சொல்லப்பட்டுள்ளது. இங்குள்ள அனைத்து மாரியம்மன் கோயில்களிலும் இதே முறையில்தான் திருவிழா கொண்டாடப்படுகிறது. தை மாதத்திலிருந்து மாசிமாதம் வரை இங்குள்ள கோயில்களில் திருவிழா நடத்தப்படுகிறது.

## References

Auvaiyar, (2014) Auvaiyar Padalkal, Divine Poet Tamil Philosophical Research Centre, Chennai, India.

Dhatchanamoorthi, A. (1973) Thamizhar Nagarigamum Panpadum, Vetri Selvi Publication, Thanjavur, India.

Guru Subramaniyam, (1996) Aalayam Thozuvathu Salavum Nanru, Tirumala Tirupati Devasthanam, India.

Murugesan, K. (2003) Naattuppuravazhipaattu Marapugalum Nambikkaigalum, Mahakavibharathiar Nuulagam, Coimbatore, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License